
# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் ● திருவள்ளுவர் ஆண்டு 2057, - ஜூன் 06, 2026 Weekly E-paper ● June 06, 2026



# காங்கிரஸ் இல்லாத இந்தியா கூட்டணி!

சுப.வீரபாண்டியன்

## ஐயோ! ஆறு மாதங்கள் பொறுக்கக் கூடாதா?

குமரன் தாஸ்

## மே.வங்கத்திலும்...?!

தலையங்கம்

## அது வெற்றிக் கழகமா? வெற்று முழக்கமா?

தோழர் பாலா

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் ● திருவள்ளுவர் ஆண்டு 2057, - ஜூன் 06, 2026 Weekly E-paper ● June 06, 2026


## காங்கிரஸ் இல்லாத இந்தியா கூட்டணி!

சுப.வீரபாண்டியன்

தவெக, தான் ஆட்சிக்கு வந்த பிறகு, முதன் முதலில் தனக்குக் கிடைத்த மாநிலங்களவை உறுப்பினர் பதவியைக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பிரவீன் சக்கரவர்த்திக்குக் கொடுத்திருக்கிறது!

காங்கிரசுக்குக் கொடுத்திருக்கிறது என்பதைவிட, திமுக கூட்டணியில் இருந்த காங்கிரஸ் கட்சியைக் கலைத்துத் தங்களிடம் கொண்டுவந்து சேர்த்திருக்கிற பிரவீன் சக்கரவர்த்தி என்னும் ஒரு மனிதருக்குக் கொடுத்திருக்கிறது என்பதுதான் உண்மை! எனவே இது வெறும் பதவி மட்டும் இல்லை, கூட்டணியைக் கலைத்ததற்கான பரிசும் கூட!



சமூக நீதிக் கூட்டணி, ஒரு பார்ப்பனருக்கு வழங்கி உள்ள பரிசு! இதுதான் சமூக நீதி! (பொதுவுடைமைக் கட்சிகள், இந்த ஆட்சிக்குத் தாங்கள் ஆதரவளித்தாலும், திமுக கூட்டணியில்தான் தொடர்கிறோம் என்று தெளிவாகக் கூறியுள்ளன!)

கடந்த டிசம்பர் மாதமே, இதே பிரவீன் சக்கரவர்த்தி, விஜய் வீட்டுக்குச் சென்று இரண்டு மணி நேரம் பேசினார் என்பதை ஊடகங்கள் தெரியப்படுத்துகின்றன!

பார்ப்பனர்களுக்குத் திமுகவின் மீது ஒரு கோபம் இருக்கும் என்பது இயற்கைதான்! பிரவீன் சக்கரவர்த்திக்குக் கூடுதலாக இன்னொரு காரணமும் உண்டு. 2024 நாடாளுமன்றத் தேர்தலில், மயிலாடுதுறைத் தொகுதியில் காங்கிரஸ் சார்பில் போட்டியிட அவர் விரும்பினார். ஆனால் திமு கழகம் அவரை ஏற்கவில்லை என்று செய்திகள் கூறுகின்றன. எனவே தன்னால் முடிந்த தீமைகளைத் திமுகவிற்கு செய்துவிட வேண்டும் என்னும் வன்மமும் அவருக்குள் இருந்திருக்கிறது!

சரியான நேரத்தை எதிர்பார்த்துக் காத்திருந்த அவருக்கு, காங்கிரஸ் தலைமையும் இப்போது உதவியிருக்கிறது! நினைத்தபடி கூட்டணியைப் பிரித்து முடித்து விட்டார்.

தேர்தல் முடிந்ததும், ஒரு நன்றி கூடச் சொல்லாமல், காங்கிரஸ் கட்சி தவெகவுடன் போய்ச் சேர்ந்து, இரண்டு அமைச்சர்களையும், இப்போது ஒரு மாநிலங்களவை உறுப்பினரையும் பெற்றுவிட்டது!

முதுகில் குத்துவதில் முனைவர் பட்டம் பெறும் அளவுக்குத் தேர்ச்சி பெற்றுள்ள காங்கிரஸோடு, இனி ஒட்டும் இல்லை, உறவும் இல்லை என்னும் முடிவுக்குத் திமுகழகம் வந்திருக்கிறது! அதன் எதிரொலியாகவே, ஜூன் 8 அன்று நடைபெறவிருக்கும் இந்தியா கூட்டணியின் கூட்டத்தில் கலந்து கொள்வதற்குக் கூட திமுக மறுத்துவிட்டது!

ஏதோ தமிழ்நாட்டு அரசியலில் ஒரு தந்திரம் புரிந்து, 59 ஆண்டுகளுக்குப் பிறகு அமைச்சரவைக்கும் வந்து விட்டோம் என்று கருதிய காங்கிரஸ் கட்சிக்கு இது ஒரு பலத்த அடி! இந்தியா முழுவதும், காங்கிரஸ் கட்சியின் போக்கு இப்போது பேசு பொருள் ஆகியிருக்கிறது!

தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் சொல்லியிருப்பது போல, பாஜகவை இந்தியாவில் வளர்த்துக் கொண்டிருப்பது மோடியும், அமித் ஷாவும் இல்லை – அந்தப் படுபாதகச் செயலைச் செய்து கொண்டிருப்பது காங்கிரஸ் கட்சிதான்!

இந்தியா கூட்டணியில் இருக்கும் எல்லா கட்சிகளும் இனிமேல் சிந்திப்பார்கள் . இந்தக் கூட்டணியில் நின்று வென்ற பிறகு, காங்கிரஸ் கட்சி எந்தக் கூட்டணியோடு சேர்ந்து, யாரிடம் அமைச்சர் பதவி பெற்று, இந்தியாவில் எந்த ஒரு ஆட்சியை உருவாக்கும் என்பதற்கு எந்த உறுதியும் இப்போது இல்லை!

இனி ஒரு வழிதான் இருக்கிறது! காங்கிரஸ் இல்லாத இந்தியா கூட்டணி விரைவில் உருவாகட்டும்! ●

# ஐயோ! ஆறு மாதங்கள் பொறுக்கக் கூடாதா?

குமரன் தாஸ்

அதிமுகவில் இருந்து வந்த செங்கோட்டையன் தவெக அமைச்சராக இருக்கிறார். வெல்லமண்டி நடராசன் இதோ மேடைக்கு வந்து பாராட்டுகிறார். அதிமுக வில் இருந்து வந்த மற்றும் பலர் கூடவே இருக்கிறார்கள். ஆனாலும் அதிமுகவும் திமுகவும் கூட்டுச் சேர்ந்து தம்மை ஆட்சியமைக்க விடாமல் தடுக்கப் பார்த்தனர் என்று விஜய் பேசுகிறார்.

தான் அதிமுகவினரின் வீட்டுக்கே போய் சோபா கொடுத்து சி.வி.சண்முகம், வேலுமணியோடு பேரம் பேசி சட்டவிரோதமாக தவெகவுக்கு இழுக்கலாம்! அது மலிவான அரசியல் இல்லை. ஆனால் திமுகவும் அதிமுகவும் பேச்சுவார்த்தை கூட நடத்தி விடக் கூடாது!

அதே போல தனக்கு (தவெகவுக்கு) எதிரான வாக்குகளைப் பெற்று "தீயசக்தி"யான திமுகவின் ஆதரவில் வென்ற கட்சிகளின் ஆதரவைப் பெற்றுத்தான்ஆட்சி அமைக்கலாம். அது அறமற்ற செயல் அல்ல. ஆனால் திமுகவும் அதிமுகவும் மட்டும் பேச்சு வார்த்தை நடத்தி விடக்கூடாது.



அது மட்டுமல்ல பாஜக நினைப்பதெல்லாம் இதோ தவெக ஆட்சியில் நடைபெறுகிறது. வந்தே மாதரம் பாடுகின்றனர். தமிழ்த்தாய் வாழ்த்தை மூன்றாம் இடத்திற்குத் தள்ளுகின்றனர். வள்ளுவருக்கு காவிச் சாயம் பூசி மகிழ்கின்றனர்.

பக்ரீத் பண்டிகைக்கு மாடுகளை வெட்டத் தடை விதிக்கின்றனர். ஒரு பார்ப்பனரை அறநிலையத்துறை மந்திரியாக்கி அழகு பார்க்கின்றார்.

தமிழ்நாடு முழுதும் கொலை, கொள்ளை, பாலியல் வன்கொடுமை, வன்முறை வெறியாட்டம், பெண் குழந்தைகள் கொலை, இரவில் தொடர் மின் தடை, போதிய பேருந்து வசதி இல்லை என மக்கள் அல்லல் படுகின்றனர். இவற்றை எதிர்த்து மக்கள் தன்னெழுச்சியாகப் போராட்டம் நடத்துகின்றனர்.

விவசாயக் கடன்களை முழுமையாக ரத்து செய்யச் சொல்லி விவசாயிகள் போராட்டம் நடத்துகின்றனர். அப்போது தவெக அமைச்சர் ஒருவர் சொல்கிறார் "விவசாயத்தை விட விளையாட்டு சிரமமானது" என்று! இதனைக் கேட்டு விவசாய மக்கள் மேலும் கொந்தளிக்கின்றனர்.

ஆனால் விஜய்க்கு ஆதரவளிக்கும் கட்சிகளின் தலைவர்கள் இன்னும் ஊடகங்களின் முன் அமர்ந்து அதிமுகவும் திமுகவும் பேச்சு வார்த்தை நடத்தி விட்டனர் என்று கூப்பாடு போட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

அதே நேரம் திமுக கூட்டணியில் வென்று விட்டு தவெகவுக்கு ஆதரவாகச் செல்லலாமா என்ற கேள்விக்கு தேர்தல் முடிவுக்குப் பிறகு அப்படிப் போகலாம். அது தவறில்லை. இந்தியா முழுதும் நடந்து வரும் ஒன்று தான் எனத் தோழர் கே.பாலகிருஷ்ணன் மின்னம்பலம் நேர்காணலில் பதில் சொல்கிறார். ஆனாலும் திமுகவும் அதிமுகவும் மட்டும் பேசி விடக்கூடாது! அது மன்னிக்க முடியாத குற்றம்!

இதுவா தமிழ்நாட்டின் தலையாய பிரச்சனை?

மக்கள் போராடுகின்றனர் விஜய் கண்டு கொள்ளாமலும் அது பற்றி வாய் திறக்காமலும் மவுனம் காக்கிறார். அவரைக் கண்டியுங்கள் அல்லது வாய் திறந்து பேசச் சொல்லுங்கள். அதை விட்டு விட்டு விஜய் பேசுவதையே நீங்களும் பேசுவீர்கள் என்றால்....?

அடுத்து, 6 மாதம் அமைதியாக இருப்போம் என்று சொன்னவர்களால் 6 நாட்கள் கூட பொறுமையாக இருக்க முடியவில்லை என்று விஜய் நேற்று திருச்சியில் பேசியதையே அவருக்கு ஆதரவு அளித்துவரும் கட்சித் தலைவர்களும் பேசி வருகின்றனர்.

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி!

கருஞ்சட்டைத் தமிழர்

## மே.வங்கத்திலும்...?!

2026 தேர்தலுக்கு முன்பு மேற்கு வங்கத்தில் மம்தா பானர்ஜி தலைமையில் திரிணாமுல் காங்கிரசும், கேரளத்தில் பிரணாய் விஜயன் தலைமையில் கம்யூனிஸ்ட் கட்சியும், தமிழ்நாட்டில் மு.க.ஸ்டாலின் தலைமையில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியும் பாஜகவை தங்கள் மாநிலங்களுக்குள் நுழைய விடாமல் தடுத்துக் கொண்டு இருந்தன.

தேர்தலுக்குப் பின் நிலைமை மாறின. மேற்குவங்கத்தில் பாஜக ஆட்சியை அமைத்துவிட்டது.

திரிணாமுல் காங்கிரசில் பிளவு ஏற்பட்டது. ஏற்படுத்தப் பட்டதா என்ற கேள்வியும் இருக்கிறது. காரணம், உத்தவ் தாக்கரேவின் சிவசேனாவுடன் ஆட்சியமைத்த பாஜக, ஏக்நாத் ஷிண்டேவை வைத்துக் கொண்டு சிவசேனாவை உடைத்து அவரை முதல்வர் ஆக்கியது. இன்று மகராஷ்டிரத்தின் ஆட்சி பாஜகவிடம், முதல்வர் தேவேந்திர பட்னாவிஸ்.

இப்போது மேற்கு வங்கத்தில் திரிணாமுல் காங்ரஸ் எதிர்க் கட்சி, அதன் தலைவர் மம்தா. அவருக்கு எதிராகக் குரல் கொடுத்த ரீதப்ரதா பானர்ஜி, தலைவர் மம்தாவின் அனுமதியில்லாமல் எதிர்கட்சித் தலைவராகிவிட்டார், ஏறத்தாழ சிவசேனாவின் ஏக்நாத் ஷிண்டே போல. எல்லாம் அம்மாநிலத்தின் ஆளுநர் ஆர்.என்.ரவியின் ஆசிர்வாதம்.

கேரளத்தில் இப்போது காங்கிரஸ் ஆட்சி. பாஜகவின் மறு உருவம். ஒரே வேறுபாடு காங்ரஸ் கொஞ்சம் மெள்ள நடக்கும்?!

மகராஷ்டிரத்தில் ஒரு ஷிண்டே போல, மேற்குவங்கத்தில் ஒரு ரீதப்ரதா பானர்ஜி போல தமிழ்நாட்டில் ஒரு எடப்பாடி பழனிச்சாமி கிடைத்தார் பாஜகவிடம். அதிமுக இரண்டு பட்டு, ஓர் அணி தவெகவுக்குச் சாதகமாகப் போகிறது. துரை வைகோ ‘துரதிஷ்டரம்’ என்கிறார். பாஜகவின் செல்லப்பிள்ளை என்று சொன்ன விஜயின் அமைச்சரவையில் இடம்பிடித்துவிட்டார் திருமாவளவன். அதாவது பாஜகவின் செல்லப் பிடியில் இருக்கிறார், முதல்வர் விஜய். பாஜகவின் ஆட்டம் புரிகிறதா?

திமு கழகம் அனைத்தையும் கவனித்து வருகிறது. தோல்விதான் வெற்றிக்குரிய தகுதியைத் தருகிறது என்கிறது வரலாறு. அதற்கு எடுத்துக்காட்டு ரோமப் பேரரசைக் கதிகலக்கிய அன்றைய மாவீரன் ஸ்பார்ட்டகஸ்.

தலைவர் ஸ்டாலின் தமிழ்நாட்டின் ஸ்பார்ட்டகஸ், இன்று! மீண்டும் உதிப்பான் உதயசூரியன்!

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்

உதவி ஆசிரியர்:
வெற்றிச்செல்வன்

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை– 600 024,
தொலைபேசி: 044-2472 6408

## முன்பக்கத் தொடர்ச்சி...

மக்களுக்கு நன்மை தரும் ஆட்சியை நடத்தினால் ஆறு மாதமென்ன 5 ஆண்டுகள் கூடப் பொறுக்கலாம். ஆனால் போகிற போக்கைப் பார்த்தால் ஆறு வாரங்களிலேயே தமிழ்நாடு சீரழிஞ்சு சின்னா பின்னமாகிப் போய் விடும் என்ற நிலை இருக்கும் போது எப்படி பொறுக்க முடியும்?

திமுக ஏன் பொறுக்க வேண்டும்? மக்கள் போராடுகிறார்களே? விவசாயிகள் போராடுகிறார்களே? அவர்களிடம் போய்ச் சொல்லுங்களேன்

ஒரு ஆறு மாதம் பொறுங்கள் என்று! துணிச்சல் இருக்கிறதா தோழர்களே?

இதோ விஜய், பாஜகவின் கையாளாக நின்று வந்தே மாதரத்தைத் திணிக்கும் ஆளுநருக்குப் பணிந்து போகிறார். இசுலாமியரின் மத வழிபாட்டு உரிமைகள் பறிபோவதை வேடிக்கை பார்க்கிறார். பல்கலைக் கழக வேந்தராக முதலமைச்சரே இருக்க வேண்டும் என்பதில் தனக்கு உடன்பாடில்லை எனச் சொன்ன அமைச்சரைக் கண்டிக்கவும் இல்லை.

இந்தப் போக்குகளை எல்லாம் கண்டிக்கும் திமுகவினரைப் பார்த்து "சும்மா சும்மா குறை சொல்லாதீர்கள் ஆறு மாதம் பொறுங்கள்" என்று அறிவுரை சொல்லும் தோழர்களுக்கு ஒன்றை மட்டும் சொல்லி நிறைவு செய்யலாம்!

பார்ப்பனியத்தை எதிர்த்த போராட்டத்தினால் தான் திராவிட இயக்கம் 100 ஆண்டுகளாக இன்னும் உயிர்ப்போடு இருக்கிறது. ஏனென்றால் போராட்டமே வாழ்க்கை! போராடாத எந்த உயிரினமும் வாழாது! வாருங்கள் சேர்ந்து போராடுவோம்!

# அது வெற்றிக் கழகமா? வெற்று முழக்கமா?

தோழர் பாலா

பதவியேற்ற சில நாட்களிலேயே நடந்த சூலூர் சிறுமி கொடூரக் கொலை, த.வெ.க அரசின் நிர்வாகக் கட்டமைப்பின் தளர்வைக் காட்டுகிறது. "தனிப்பட்ட குற்றங்களுக்கு முதலமைச்சர் பொறுப்பாக முடியுமா? முந்தைய ஆட்சியில் நடக்கவில்லையா?" போன்ற வாதங்கள் அபத்தமானவை. ஆளும் அரசின் உடல் மொழியே காவல்துறையை இயக்கும். புதிய அரசின் முழு கவனமும் பி.ஆர் (PR) வேலைகளிலும் கொண்டாட்டங்களிலும் சிதறிக் கிடப்பதே குற்றவாளிகளுக்குத் துணிச்சலைத் தருகிறது. முந்தைய ஆட்சிகளின் தவறுகளைக் காட்டித் தப்பிப்பது நீங்கள் சொல்லிய 'மாற்றத்திற்கு' நேர் முரணானது.

மாற்றத்தின் முகமூடியாக முன்னிறுத்தப்படும் த.வெ.க-வின் முற்போக்கு பிம்பத்தின் பின்னால் உள்ள கருத்தியல் சறுக்கல்கள் மிக ஆபத்தானவை.

7 பட்டியலின அமைச்சர்கள் இருப்பதால் இது சமூக நீதி ஆகிவிடாது. 2021ல் மோடியின் அமைச்சரவையில் 12 தலித் அமைச்சர்கள் இருந்தும் ரோகித் வெமுலா, ஹாத்ரஸ், உனா என விளிம்புநிலை மக்கள் மீதான ஒடுக்குமுறைகள் தொடரவே செய்தன. கருத்தியல் தீர்க்கமற்ற பிரதிநிதித்துவம் வலதுசாரி கட்டமைப்புகளின் வெறும் நாடகம்.

பார்ப்பன ஆதிக்கத்தை உடைக்க நீதிக்கட்சி உருவாக்கிய 'இந்து சமய அறநிலையத்துறையை', 2026 இல்



பார்ப்பனரான எஸ்.ரமேஷ் வசம் ஒப்படைத்திருப்பது வரலாற்றுப் பெருந்துயரம். "அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம்" என்ற பெரியாரியக் கனவைச் சிதைக்கும் மாபெரும் கருத்தியல் பின்னடைவு இது.

மாநில உரிமைகளுக்கும் சமூக நீதிக்கும் எதிரான 'தேசிய கல்விக் கொள்கையை' (NEP) ஆதரிக்கும் ஏ.பி.வி.பி (ABVP) அமைப்பினர், எவ்விதத் தடையுமின்றி முதல்வரைச் சந்திக்கிறார்கள். அதைத் திட்டவட்டமாக நிராகரிக்க வேண்டிய முதல்வர் விஜய், "பரிசீலிப்போம்" என நழுவுவது நவீன குலக்கல்விக்குக் கதவு திறக்கும் செயல். பெரியார், அம்பேத்கர் படங்களை இவர்கள் மாநாட்டு மேடைகளில் வைப்பது வெறும் பி.ஆர் வியூகம் மட்டுமே என்பது இதன்மூலம் வெட்டவெளிச்சமாகிறது.

தந்தை பெரியார் கற்பித்த 'சுயமரியாதையை' அழித்து, "விஜய் சொன்னால் சரியாகத்தான் இருக்கும்" என்ற ஒற்றை மனித வழிபாட்டு மனநிலைக்கு இளைஞர்கள் தள்ளப்படுகிறார்கள். அதேபோல், பெண்களின் தன்னுரிமை மற்றும் சொத்துரிமையைப் பேசாவிடாமல், 'தாலிக்குத் தங்கம்' வழங்கும் திட்டங்கள் பெரியார் ஒழிக்க நினைத்த ஆணாதிக்கத் திருமண முறையையும் வரதட்சணையையுமே மீண்டும் ஊக்குவிக்கின்றன.

ஒரு அரசின் நம்பகத்தன்மை திரையில் பேசும் வசனங்களில் இல்லை, தரையில் செயல்படுத்தும் கருத்தியல் உறுதியில்தான் இருக்கிறது. 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்பது வெறும் திரைப்பட வசனம் அல்ல, அது அதிகாரத் திமிரோடு சமரசம் செய்யாமல் போராட வேண்டிய தத்துவம். த.வெ.க அரசு அந்தப் போராட்டத்திற்குத் தயாராக இல்லை என்பதையே அதன் செயல்பாடுகள் காட்டுகின்றன.

திரை விலகியதும் நிஜம் முகம் காட்டத் தொடங்கியிருக்கிறது! ●

## இரங்கல் செய்தி



திராவிட இயக்க தமிழர் பேரவையைப் பொள்ளாச்சியில் தொடங்கி வைத்து, இயக்கத்தில் சிறப்பாகப் பணியாற்றிய தோழர் அ.இராசுகுமார் 31-05-20 26 அன்று மறைவு எய்தினார். தந்தை பெரியார் கொள்கையில் உறுதியாக இருந்தவர். திமுகழகத்தில் இலக்கிய அணிப் பொறுப்பாளராகவும், பேச்சாளராகவும்செயல்பட்டவர். அவரின் மறைவிற்குத் திராவிட இயக்கத் தமிழர் பேரவை சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்!!

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian